தஞ்சாவூர்,முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

ந.க.எண்.4186/அ1/2023,நாள்.28 .10.2023

*********

பொருள்: பள்ளிக்கல்வி – அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் நியமனம் – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு.க.செங்குட்டுவன் என்பாரின் வாரிசுதாரர் திரு.செ.சுவாமிநாதன் என்பார் இளநிலை உதவியாளர் – பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல்–தொடர்பாக.

பார்வை:

1. பட்டுக்கோட்டை, மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.05834/அ1/2015, நாள்.05.06.2017.
2. அரசாணை (நிலை) எண்48/தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள் 26.02.2021.
3. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் செயல்முறைகள்– ந.க.எண்.21925/ஜே/இ4/2021, நாள் 09.04.2021 மற்றும் 17.06.2021.
4. அத்திவெட்டி அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கடிதம் நாள்.11.05.2023.

*********

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை கல்வி மாவட்டம், மதுக்கூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 12.08.2004 அன்று காலமான திரு.க.செங்குட்டுவன் என்பாரின் வாரிசுதாரர் திரு.செ.சுவாமிநாதன் என்பாருக்கு பார்வை 1ல் காணும் செயல்முறைகளின் படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 06.06.2017 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 2ல் காணும் அரசாணை பத்தி 5.1மற்றும்5.2இல் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்நவித விதித்தளர்வு (Relaxation of Rules)மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது.

(5.2) மேலே பத்தி 5.1இல் உள்ள ஆணையினை செயல்படுத்த சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டில் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப்பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை(proceedings) வெளியிட்டு தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

எனவே தனியருக்கு எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை 2–இல் காணும் அரசாணையின்படியும் பார்வை(4)ல் காணும்

கடிதத்தில் தலைமையாசிரியரின் பரிந்துரையின் பேரில் திரு.செ.சுவாமிநாதன் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற நாளான 06.06.2017 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

மேற்படி திரு.செ.சுவாமிநாதன் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத்தொடர் பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார்.தகுதிகாண் பருவகாலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள்/பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

முதன்மைக்கல்வி அலுவலர்
தஞ்சாவூர்

பெறுநர்:

திரு.செ.சுவாமிநாதன்,
இளநிலை உதவியாளர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
அத்திவெட்டி.

நகல்:

1. தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி,அத்திவெட்டி.
2. மாவட்டக்கல்வி அலுவலர்(இடைநிலை),தஞ்சாவூர்.
3. பள்ளிக்கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி)அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பபடுகிறது.